(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சர்வே எண் 442 சம்பந்தப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 440/1, 440/2 ஆகும். பாகபாத்திய விடுதலை ஆவணம் சர்வே எண் 443 சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். 29.11.2011ம் தேதிய ஏற்பாடு ஆவணத்தில் சர்வே எண் 440/1 நம்பர் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 4ம்தபசில் 1ம் அயிட்ட சொத்து 2ம் தபசிலின் ஒரு பகுதி என கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் அயிட்ட சொத்து சர்வே எண் 440/1ல் அடங்காது என்றால் சரிதான். சர்வே எண் 440/1 சொத்தை 1ம் பிரதிவாதி 1999ம் வருடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் கட்சி அவரது கிரைய சொத்துடன் என் இடத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என்பது தான். அவரது கிரையத்தை நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.443க்கு மேல்புறம் தான் சர்வே எண் 440/1 உள்ளது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணம் வா.சா.ஆ6ல் தங்கள் கைவசம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது சர்வே எண் 443ல் உள்ள இடம் என்றால் சரிதான். அது கூட்டு குடும்ப சொத்தாக இருந்ததால் தங்களது கைவசம் என்று வாசகம் கண்டு அந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ1ல் சர்வே எண்.443ஐ மட்டும் தான் என் சகோதரர்கள் எனக்கு பாகபாத்திய விடுதலை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சர்வே எண் 443ல் வடக்கோரம் மேலோரம் பகுதியை எனக்கு கொடுத்தார்கள். சர்வே எண் 440/1 என்பது என் விடுதலை ஆவணத்தில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற வா.சா.ஆ6சொத்திற்கு மேல்பக்கம் நடைபாதை என்றால் சரிதான். அந்த நடைபாதையின் கிழக்கு ஓரத்தில் இருந்து சர்வே எண் 443ல் மேலோரம் வரை கிழமேல் வடதலை 52-1/2 அடியும், தென்தலை 48-1/2 அடியும் உள்ளது என்றால் சரியல்ல. அவர் கிரையம் பெற்றதே வடதலை 44-1/2 , தென்தலை 36-1/2 ஆகும். அதை விட அதிகமான அளவுகளை உரிமை கொண்டாட இயலாது. ஸ்தலத்தில் கிழமேல் வடதலை 52-1/2 அடியும், தென்தலை 48-1/2 அடியும் உள்ளது என்றால் ஸ்தலத்தில் நிறைய இடங்கள் உள்ளது. அவர் கிரையம் பெற்றது நான் கூறிய அளவுகள் தான். 1ம்

பிரதிவாதியின் கிரையபத்திரத்தில் குறைவான அளவுகள் காண்பித்து கிரையம் பெற்றதை நான் எனக்கு சாதகமாக பயன்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பத்திரத்தில் குறைவான அளவுகளை காண்பித்து கிரையம் பெற்றிருந்தாலும் ஸ்தலத்தில் வடதலை 52-1/2 அடியும், தென்தலை 48-1/2 அடியும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அளவுகள் குறைவு என்பதால் மீண்டும் கிரைய ஆவணத்தில் விடுபட்ட அளவுகளை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. தற்போது ஸ்தலத்தில் உள்ளவாறு வடதலை 52-1/2 அடியும், தென்தலை 48-1/2 அடி உள்ளபடி அவரிடம் ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ8 ஆவணம் நன்கொடை ஆவணத்தில் பிரதிவாதி தான் கிரையம் பெற்றஇடத்தில் வடக்கோரம் 5 அடி போக தென்பக்கம் 15 அடியை அரசுக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி 15அடிக்கு அனுசரித்து சகோதரர்கள் அனைவரும் அரசுக்கு சுமார் 320 அடி பொது பயன்பாட்டிற்கு ஒப்படைத்தோம் என்றால் சரிதான். அரசு 1ம்பிரதிவாதி வடக்கோரம் வைத்திருந்த 5அடிக்கு வடபுறம் தான் பாதை அமைத்தார்கள் என்றால் சரியல்ல. தென்புறம் தான் பாதை அமைத்தார்கள். அரசு 15 அடியில் பாதை அமைக்காததால் பிரதிவாதியின் கைவசம் தான் 15 அடி மற்றும் அவரது கைவசம் உள்ள 5 அடியும் உள்ளது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதிக்கு 20அடியும் சேர்த்து மொத்தம் 54 அடியும் உள்ளது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தென்வடல் 54 அடிக்கு தென்புறம் கணேசன் என்பவர் வா.சா.ஆ3 மூலம் 27.12.2011 தேதியில் கிரையம் பெற்றார் என்றால் கணேசன் கிரையம் வாங்கியது சரிதான். கணேசன் வா.சா.ஆ3ன் மூலம் வாங்கிய இடத்தை தான் எனக்கு வா.சா.ஆ4ன் மூலமாக கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். பிராது 2ம் தபசில் சொத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அரசு ரோடு அமைத்த இடத்திற்கு 54 அடி தெற்கு தள்ளி தான் 4ம் தபசில் 2ம்அயிட்ட இடம் இருக்க முடியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ6ன் மூலம் 1ம்பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்தில் நான் வீண் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி வா.சா.ஆ6ன் மூலம் கிரையம் வாங்கிய சொத்தில் தெற்கோரம் 24அடி இடத்தை சிவா என்பவருக்கு வா.சா.ஆ10ன் மூலமாக கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அது தவறான கிரையமாகும். சிவாவும் 1ம்பிரதிவாதியும் தங்களது சொத்தை பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணம்

வா.சா.ஆ12 என்றால் சரிதான். மேற்படி பரிவர்த்தனையின் அடிப்படையில் 4ம்தபசில் 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அது தவறு. நான் கோரியுள்ள 3ம் பரிகாரமானது ஆவணத்தை பொறுத்து செல்லாது என விளம்புகை மட்டும் தான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விளம்புகையை தொடர்ந்து தொடர் பரிகாரமாக தடையாணை பரிகாரமும், சுவாதீன பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். நான் அவரது இடத்தை பொறுத்து எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை. 1ம்பிரதிவாதி வாங்கிய கிரையம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. அது தவறு. கார்மேகம் என்பவரை நான் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் என் மகனுக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் ஏற்புடையது அல்ல என்றாலும், நான் எனக்கு இல்லாத உரிமையை என் மகனுக்கு ஏற்படுத்திகொடுத்தேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாதது என்றால் சரியல்ல. 4ம் தபசில் 1ம்அயிட்ட சொத்து 1ம் தபசிலின் ஒரு பகுதி என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 4ம் தபசில் 2ம்அயிட்ட சொத்து பிராது 2ம் தபசிலின் ஒரு பகுதி என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அளவுகள் தவறு என பிரதிவாதிகள் ஆட்சேபனைகளை தெளிவுபடுத்தும் வகையில் ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றால் இதுவரை ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை. பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என் பிராது தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.